11639



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

51 | T | I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) I, II
நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I, II
Drama and Theatre (Tamil) I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I

**அறிவுறுத்தல்கள் :**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** பல்வேறு கலைஞர்களின் கூட்டு முயற்சியின் வெளிப்பாடாகக் கொள்ளத்தக்க ஆற்றுகைக் கலைவடிவம்
(1) ஓவியம் (2) நாடகம் (3) சிற்பம் (4) கைவினை

**2.** சடங்கரங்கொன்றில் உணர்ச்சியைத் தூண்டத்தக்கவகையில் பயன்படும் வாத்தியம்
(1) மிருதங்கம் (2) வீணை (3) வயலின் (4) உடுக்கு

**3.** எழுத்துருவை, காட்சிப் படிமமாக சிருஷ்டிப்பதில் மிகப் பிரதானமான வகிபங்கினை ஏற்பவர்
(1) நெறியாளர் (2) தயாரிப்பாளர்
(3) வேட உடை விதானிப்பாளர் (4) ஒலி அமைப்பாளர்

**4.** 'சைக்கிளோரமா' எனப்படும் வான்திரையைக் கொண்ட அரங்கின் தாயகமாகக் கருதப்படுவது
(1) இந்தியா (2) இலங்கை (3) இங்கிலாந்து (4) இத்தாலி

**5.** பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் படைப்புகளுள் வரலாற்று நாடகமாகக் கருதப்படுவது
(1) மாணிக்கமாலை (2) சங்கிலி
(3) பொருளோ பொருள் (4) உடையார் மிடுக்கு

**6.** நாடக ஆற்றுகையில் பிரயோகிக்கப்படும் கலைகளுள் கேட்டல் புலனுக்குரிய மூலகங்களை மட்டும் உள்ளடக்கிய தொகுதி
(1) வேட உடை, ஒளி, இசை
(2) இசை, ஒலி விளைவுகள், பாடல்
(3) ஒலி விளைவுகள், கைப்பொருள்கள், ஒப்பனை
(4) பாடல், இசை, ஒளிவிதானிப்பு

**7.** ஒலிகளைக் குரலுக்கூடாகப் பாவனை செய்யும்போது கவனத்திற் கொள்ளவேண்டியது **அல்லாத** விடயம்
(1) குரலின் தொனி (2) குரலின் வீச்சு
(3) குரலின் புறத்தெறிகை (4) குரலின் வேகம்

**8.** 'மப்பன்றிக் கால மழை காணா மண்ணில்...' எனத் தொடங்கும், நாடகப் பண்புடைய கவிதையினைப் படைத்தவர் யார்?
(1) மகாகவி து. உருத்திரமூர்த்தி (2) இ. முருகையன்
(3) மாயாகோவஸ்க்கி (4) அம்பி

[பக். 2 ஐப் பார்க்க

9. நாடக ஆற்றுகையின் எழுத்துருத் தெரிவு முதல் மேடையேற்றத்திற்குப் பின்னரான ஒழுங்குபடுத்தல் ஈறான செயற்பாடுகளைத் திட்டமிட்டு ஒழுங்கமைப்பவர்
   (1) நெறியாளர் (2) தயாரிப்பாளர்
   (3) நாடகாசிரியர் (4) மேடை முகாமையாளர்

10. நடிகனின் நடிப்பிற்குத் துணைபுரிவதுடன், நாடகத்தின் களத்தினை அழகியல் இரசனைக்குரிய கட்புலம்சார் சூழலாகப் படைப்பாக்கம் செய்வது எவ்வாறு அழைக்கப்படும்?
   (1) ஒப்பனை (2) இசை விதானிப்பு
   (3) காட்சி விதானிப்பு (4) ஒளி விதானிப்பு

11. "நாளை இந்த நாட்டை - இங்கு
நடத்தப்போகும் குருவிகள்..." எனும் பாடல் வரிகள் இடம்பெற்ற சிறுவர் நாடகத்தின் பெயர் யாது?
   (1) தப்பி வந்த தாடி ஆடு (2) கண்மணிக்குட்டியார்
   (3) கண்டறியாத கதை (4) வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள்

12. யூதாஸ் மற்றும் பிலாத்து மன்னன் போன்ற பாத்திரங்களை உள்ளடக்கி நிகழ்த்தப்படும் சடங்கு
   (1) வேட்டைத் திருவிழா (2) ரட்டயக்கும
   (3) பாஸ்கா (4) வனவாசம்

13. பாண்டிருப்பு மற்றும் உடப்புப் பிரதேசங்களில் தனித்துவம் வாய்ந்ததாக நிகழ்த்தப்படும் திரௌபதை அம்மன் சடங்காக அமைவது
   (1) பாண்டவர் வனவாசம் (2) அருச்சுனன் தபசு
   (3) வேட்டைத் திருவிழா (4) சூரன்போர்

14. குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'ஆரொடு நோகேன்' நாடகத்தின் முதல் மேடையேற்றம் நிகழ்ந்த பாடசாலை
   (1) யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை (2) யா/இந்து மகளிர் கல்லூரி
   (3) யா/உடுவில் மகளிர் கல்லூரி (4) யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

15. மேல்வருவனவற்றுள் சிங்கள ஆற்றுகை / நிகழ்த்துகை வடிவம் **அல்லாதது**
   (1) ஒயிலாட்டம் (2) கோலம (3) சொக்கரி (4) ரட்டயக்கும

16. போலச் செய்தலின்போது உணர்ச்சி வெளிப்பாட்டோடு தொடர்புடையை அபிநயமாகக் கொள்ளப்படுவது
   (1) ஆங்கிகம் (2) சாத்விகம் (3) வாச்சிகம் (4) ஆஹார்யம்

17. பேராசிரியர் சு. வித்தியானந்தனால் புத்தாக்கம் செய்யப்பட்ட கூத்துக்களில் வடமோடிக் கூத்து எது?
   (1) நொண்டி நாடகம் (2) அலங்காரரூபன்
   (3) இராவணேசன் (4) எஸ்தாக்கியர்

18. தொழில்நுட்பத்தின் உதவியுடன் காட்சியையும் குரலையும் இணைப்பாக்கம் செய்து வெளிப்படுத்தும் படைப்பாக விளங்குவது
   (1) பலே (2) நாடகம்
   (3) வானொலி நாடகம் (4) தொலைக்காட்சி நாடகம்

19. நாட்டைக்கூத்து, வேடன் பறி ஆட்டம் என்பன நிகழ்த்தப்படும் பிரதேசங்கள் முறையே
   (1) மன்னார், மாதோட்டம் (2) பருத்தித்துறை, திருகோணமலை
   (3) வட்டுக்கோட்டை, மலையகம் (4) கல்முனை, வீரமுனை

20. சிங்கள 'சொக்கரி' நாட்டார் ஆற்றுகை நிகழ்த்தப்படும் அரங்க வெளி யாது?
   (1) வட்டக்களரி (2) கரலிய (3) தானாயம்பல (4) களத்துமேடு

21. முன் தயார்படுத்தலின்றிய புதிதளித்தற் செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் மாணவர் பெற்றுக்கொள்ளும் அனுகூலம் **அல்லாதது**
   (1) படைப்பாக்கத்திறனை விருத்தி செய்தல்
   (2) ஆளுமைத் திறனை விருத்தி செய்தல்
   (3) சுய சிந்தனையின்றி மனப்பாடம் செய்தல்
   (4) தமது பலவீனம், பலம் என்பவற்றைக் கண்டறிதல்

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**22.** நாடக ஆற்றுகையிலிருந்து சிறுகதை எந்தப் பண்பின் அடிப்படையில் வேறுபடுகிறது?
(1) கதைப்பின்னல் (Plot) காணப்படுதல்
(2) பாத்திரங்கள் காணப்படுதல்
(3) மோதுகை காணப்படுதல்
(4) காட்சிப்படிமம் மனவெளியில் உருவாக்கப்படுதல்

**23.** ஈழத்து மரபுவழி தமிழ்க் கூத்தின் தனித்துவமான பண்பு **அல்லாதது**
(1) கட்டியக்காரன் வரவு
(2) படர்க்கையில் பாத்திரங்கள் அறிமுகம் செய்தல்
(3) ஆடல், பாடல் மூலமான அளிக்கை
(4) ஆற்றுகையைப் படச்சட்ட அரங்கில் நிகழ்த்துதல்

**24.** நாடக ஆற்றுகைக்கான பாத்திரத் தெரிவின்போது அனைத்து நடிகர்களின் முன்னிலையிலும் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்படும் தெரிவுமுறை
(1) திறந்த தெரிவு (2) மூடிய தெரிவு
(3) சல்லடைத் தெரிவு (4) மறைமுகத் தெரிவு

**25.** வடமோடி கூத்துக்கள் தொடர்பான **பொருத்தமற்ற** கூற்று யாது?
(1) போர், வீரம் தொடர்பான கருப்பொருள்கள் முதன்மை பெறும்.
(2) அலங்காரரூபன், நொண்டி நாடகம் போன்றவை இம்மரபில் எழுதப்பட்டவை.
(3) 'கந்தார்த்தம்' என்ற பாடல் மெட்டு முக்கியம் பெற்றிருக்கும்.
(4) பாரம் கூடிய கரப்புடை, கிரீட முடி என்பன பயன்படுத்தப்படும்.

**26.** 'பார்ஸிய' நாடகம் என அழைக்கப்படுவது
(1) கூத்து (2) இசைநாடகம் (3) வாசகப்பா (4) விலாசம்

**27.** பின்வருவனவற்றுள் கற்பனைப் பாத்திரமாகக் கருதப்படத்தக்கது
(1) வயோதிபர் (2) மீனவன்
(3) வேற்றுக்கிரகவாசி (4) நோயாளி

**28.** பின்வருவனவற்றுள் அரங்க விளையாட்டாகக் கருதப்படுவது
(1) கிளித்தட்டு (2) பழக்கலவை (3) பல்லாங்குழி (4) கிட்டிப்புள்

**29.** "எங்கள் மண்ணின் ஒவ்வொரு புல்லையும் ஒவ்வொரு பூவையும்..." எனும் பாடல் இடம்பெற்றுள்ள நாடகம்
(1) நாமிருக்கும் நாடு நமது (2) பொய்க்கால்
(3) உயிர்த்த மனிதரின் கூத்து (4) சக்தி பிறக்குது

**30.** சி. மௌனகுருவின் 'மழை' நாடகம் பின்வரும் எவ்வகைக்குரியது?
(1) யதார்த்த நாடகம் (2) இசை நாடகம் (3) சிறுவர் நாடகம் (4) நிருத்திய நாடகம்

**31.** அவைக்காற்றுக் கலைக்கழகத்தினை உருவாக்கியவரும் தற்போதுவரை புலம்பெயர் தேசங்களில் அரங்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவருமான நாடக ஆளுமை யார்?
(1) நா. சுந்தரலிங்கம் (2) க. பாலேந்திரா
(3) க. சிதம்பரநாதன் (4) அ. தாசீசியஸ்

**32.** பின்வருவோருள் 'ஆரொடு நோகேன்' நாடகத்தை நெறியாள்கை செய்தவர் **அல்லாதவர்**
(1) க. சிதம்பரநாதன் (2) இ. கமலநாதன்
(3) இ. விஜயன் (4) க. திலகநாதன்

**33.** 'ஆரொடு நோகேன்' நாடகத்தில் ரஞ்சித்குமார் பாத்திரத்தின் இயல்பு
(1) போலி கௌரவம் பார்ப்பவர்
(2) பிள்ளைக்காக எதுவும் செய்பவர்
(3) தான் எண்ணுவதே சரி என நினைப்பவர்
(4) மிகவும் கண்டிப்பானவர்


[பக். 4 ஐப் பார்க்க

**34.** நாடகம் ஒன்றின் இறுதி ஒத்திகையாக அமைவது யாது?
(1) வெள்ளுடுப்பு ஒத்திகை
(2) தொழினுட்ப ஒத்திகை
(3) செயல் ஒத்திகை
(4) வடிவமைப்பு ஒத்திகை

**35.** தமிழர் கூத்து மரபில் 'மாதோட்டப்பாங்குக் கூத்து' என அழைக்கப்படுவது
(1) வாசகப்பா
(2) டிறாமாமோடி
(3) வடபாங்கு
(4) தென்பாங்கு

**36.** பின்வருவனவற்றில் முல்லைத்தீவுப் பிரதேசத்திற்குரிய தனித்துவமான கூத்து யாது?
(1) காத்தவராயன் கூத்து
(2) காமன் கூத்து
(3) கோவலன் கூத்து
(4) வடமோடிக் கூத்து

**37.** இப் படத்தில் காட்டப்பட்டுள்ள, அண்மையில் இவ்வுலகை நீத்த தமிழ் நாடகப் பேராளுமை யார்?
(1) குழந்தை ம. சண்முகலிங்கம்
(2) நா. சுந்தரலிங்கம்
(3) எஸ். ரி. அரசு
(4) பிரான்சிஸ் ஜெனம்



**38.** இப் படத்தில் காட்டப்பட்டுள்ள ஒப்பனைப் பொருள் யாது?
(1) உதட்டுச் சாயம்
(2) கண் மை
(3) கிறேப் கெயார்
(4) பான்கேக்



**39.** இப் படத்தில் காட்டப்பட்டுள்ள ஒளி விதானிப்புக்குரிய சாதனம் யாது?
(1) மங்கலாக்கி
(2) வர்ணச்சில்லு
(3) பொட்டொளி
(4) பரப்பொளி



**40.** இப் படத்தில் காட்டப்பட்டுள்ள பாத்திரங்கள் யாவை?
(1) மாயன், மயிலி
(2) மாசிலன், மையுண்ட நெடுங்கண்ணாத்தை
(3) மன்னவன், மையுண்ட நெடுங்கண்ணாத்தை
(4) மறைக்காடர், மயிலி



PAST PAPERS WIKI

**

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

| 51 | T | I, II |
|---|---|---|

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) I, II
நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I, II
Drama and Theatre (Tamil) I, II

## நாடகமும் அரங்கியலும் (தமிழ்) II

※ முதலாம் வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

**1.** பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) ‘வஞ்சிப்பத்தன்’ எனும் நாடகப்பாத்திரம் இடம்பெறும் கூத்து மரபு யாது? (01 புள்ளி)

(ii) நடிகர் தெரிவின்போது ‘சல்லடைத்தெரிவு’ என்பதால் கருதப்படுவது யாது? (01 புள்ளி)

(iii) சுற்றிவரப் பார்ப்போரைக் கொண்ட அரங்க வெளி எவ்வாறு அழைக்கப்படும்? (01 புள்ளி)

(iv) ‘மாத்துப் பூசுதல்’ என்பதால் கருதப்படுவது யாது? (01 புள்ளி)

(v) “அம்மையே அப்பா உங்கள் அன்பினில் விளைந்த ஆரமுதம்” என ஆரொடு நோகேன் நாடகத்தில் விழிக்கும் பாத்திரம் எது? (01 புள்ளி)

(vi) சிங்கள ‘நாடகம’ ஆற்றுகை இடம்பெறும் அரங்க வெளி யாது? (01 புள்ளி)

(vii) ‘மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள்’ எனும் அரங்கியல் ஆய்வுநூலை எழுதியவர் யார்? (01 புள்ளி)

(viii) ‘மனிதர்கள் உயிர்க்க வேண்டும்...’ எனும் பாடல் இடம்பெற்ற நாடகம் எது? (01 புள்ளி)

(ix) அரங்க நடைமுறையில் நாடகமோடி / நாடகப் பாணியின் **இரண்டு** முறைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(x) உடற்பயிற்சிக்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய **இரண்டு** அரங்க விளையாட்டுக்கள் தருக. (02 புள்ளிகள்)

**2.** (i) ‘நடிப்பு’ என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) நடிகர் ஒருவர் பெற்றிருக்கவேண்டிய திறன்களும் பண்புகளும் யாவை? (05 புள்ளிகள்)

(iii) நடிப்புத்திறனை வளர்த்துக் கொள்வதற்கு நடிகர் ஒருவர் பெற்றிருக்க வேண்டிய நடிப்புப் பயிற்சிகளை விளக்குக. (05 புள்ளிகள்)

**3.** (i) மேடை முகாமையாளரின் பணிகள் **இரண்டு** தருக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் அரங்க வெளிகள் பற்றி விளக்குக.
(அ) திறந்த வெளி அரங்கு
(ஆ) காமன் பொட்டல் (04 புள்ளிகள்)

(iii) படச்சட்ட அரங்கு ஒன்றை அடிப்படையாகக் கொண்டு எழுத்துருக்கான பின்வரும் ஒளிக் குறிப்புகளை எவ்வாறு தயாரிக்கலாம்?
(அ) செயற்பாட்டுக் குறிப்பு
(ஆ) வரிக் குறிப்பு
(இ) நேரக் குறிப்பு (06 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

**4.** பின்வரும் அரங்கப் பண்புடைய சடங்குகளை ஆற்றுகை செய்யப்படும் முறை, ஆற்றுகை வெளியின் இயல்பு, ஐதீகக் கதைப்பொருள், ஆற்றுவோர் பார்ப்போர் தொடர்பு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(i) கந்தசஷ்டியுடன் தொடர்புடைய சடங்கு

(ii) கிறிஸ்தவ தவக்கால நாட்களில் நடைபெறும் சடங்கு

(iii) பாண்டிருப்பு திரௌபதி அம்மனுடன் தொடர்புடைய சடங்கு

(04 × 03 = 12 புள்ளிகள்)

**5.** (i) 'கூத்து' என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூத்துக்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(அ) வடமோடிக் கூத்து

(ஆ) தென்மோடிக் கூத்து

(இ) அர்ச்சுனன் தபசு

(ஈ) வடபாங்குக் கூத்து (04 புள்ளிகள்)

(iii) கூத்துக்களின் பிரதான இயல்புகள் **ஆறினைக்** குறிப்பிட்டு, சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

**6.** (i) 'ஆரொடு நோகேன்' நாடகத்தில் வரும் வகை மாதிரிப் பாத்திரங்களான அம்பிகை, சங்கரி, ஷீலா, ரஜீவ் ஆகிய பாத்திரங்களின் இயல்புகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) 'புதியதொரு வீடு' நாடகத்தில் வரும் மயிலி-மாசிலன் திருமணக் காட்சியின்போதும், மாயன் இறுதியில் வந்து மயிலியைக் காணும்போதும் மயிலி எனும் பாத்திரத்தில் வெளிப்பட்ட உணர்வுகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) 'ஆரொடு நோகேன்' நாடகத்தில் வரும் திருமண நாள் காட்சிக்குரிய காட்சி விதானிப்பை எவ்வாறு திட்டமிடலாம் என விளக்குக. (04 புள்ளிகள்)

**7.** பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) வேட்டைத் திருவிழா

(ii) புதிதளித்தல்

(iii) நால்வகைச் சித்திரிப்பு

(iv) ஒலி விளைவுகள்

(v) நடன வடிவாக்கம் (choreography)

(04 × 03 = 12 புள்ளிகள்)

* * *

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න